# தூத்துக்குடி மாநகராட்சி

## சாதாரண கூட்டப் பொருள்

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் நாள் திங்கள் கிழமை காலை 10.30 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3(1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| மாமன்ற கூட்ட தேதி | மாமன்ற தீர்மானம் | தீர்மானம் |
|---|---|---|
| **30.01.2023** | 1. தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், தினசரி சேகரமாகும் திடக்கழிவுகள் மட்டும் கழிவுகளை தவிர்த்து மற்ற கழிவுகள் மாநகராட்சிக்கு சொந்தமான தருவைக்குளம் உரக் கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. மேற்படி குப்பைகளை ஒரே இடத்தில் சீரான முறையில் குவிக்கும் பணிகளையும், மாநகராட்சியில் சாலை ஓரத்தில் வளர்ந்துள்ள கருவேல மரங்களை அகற்றும் பணி மேற்கொள்ளவும், பொது சுகாதார பிரிவு சம்பந்தமான பணிகள் மேற் கொள்ளவும், தனியார் ஒப்பந்தகாரர் சுதா Engineering J.C.B Truck operators, தூத்துக்குடி என்ற நிறுவனம் மூலம், நவம்பர் 2022 முதல் ஜனவரி 2023 வரை ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது மேற்படி பணிக்கான நீட்டிப்பு காலம் முடிவடைவதால் 01.02.2023 முதல் 31.03.2023 வரை 2 மாதங்களுக்கு சுதா Engineering J.C.B Truck operators, தூத்துக்குடி நிறுவனத்தின் மூலமாக தொடர்ந்து பணிகளை மேற்கொள்ளவும் இதற்கான உத்தேச செலவினத் தொகை மாதம் ஒன்றிக்கு ரூ.2,00,000/– வீதம் 2 மாதத்திற்கு ரூ.4,00,000/– பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எச்3/3764/2018 | 261)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 2. தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்றப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது. மேற்கண்ட திட்டப்பணியில் 12 உந்து நிலையங்கள் மாநகராட்சியில் மூலம் பராமரிப்பு செய்து பம்ப் இயக்க வேண்டிய நிலையில் உள்ளது.<br><br>1. சத்திரம் தெரு<br>2. வ.உ.சி கல்லூரி<br>3. அண்ணா நகர்<br>4. சிதம்பரநகர்<br>5. முனியசாமிபுரம்<br>6. புதிய பேருந்து நிலையம்<br>7. செல்வநாயகபுரம்<br>8. செயின்ட்.தாமஸ்<br>9. குரூஸ்புரம்<br>10. போல்டன்புரம்<br>11. கடற்கரை சாலை<br>12. பாளையங்கோட்டை ரோடு<br><br>மேற்கண்ட இடங்களில் உள்ள பம்ப் இயக்குவதற்கு 12 எண்ணம் பம்ப் ஆப்ரேட்டர்கள் நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் தற்காலிக அடிப்படையில், 2022 – 2023ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி பம்ப் ஆப்ரேட்டர் – ரூ.554/– வீதம் வழங்குவதற்கும், 01.01.2023 முதல் ஓராண்டு காலத்திற்கு பணியில் ஈடுப்படுத்திக் கொள்வதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான உத்தேச செலவினத்தொகை ஆண்டிற்கு ரூ.25.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு:<br><br>இம்மாநகராட்சியில் நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம்<br>பணியமர்த்தப்பட்ட பம்ப் ஆப்ரேட்டர் 12 நபருக்கு, 2022 – 2023ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி, பம்ப் ஆப்ரேட்டர் – ரூ.554/– வழங்குவதற்கும், அதனை 01.01.2023 முதல் ஓராண்டு காலத்திற்கு பணியில் ஈடுப்படுத்திக் கொள்ளவும், மேற்கண்ட செலவினத்தொகை ரூ.25.00 இலட்சத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**E5/02396/19** | 262) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | 3. தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் பக்கிள் ஓடை சுத்தம் செய்தல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் மற்றும் தெருக்களில் உள்ள மண் மேடுகள் அகற்றுதல் கட்டுமான கழிவுகள் அகற்றுதல், மாநகராட்சி பூங்கா சரிசெய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் ஜே.சி.பி இயந்திரத்திற்கு நிரந்தர ஓட்டுநர்கள் இல்லாததால், தற்காலிகமாக நகர்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் ஜே.சி.பி, ஓட்டுநர் 26.11.2022 முதல் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார். மேற்படி ஜே.சி.பி ஓட்டுநருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.554.00 ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி ஜே.சி.பி. மூலம் மாநகராட்சியின் அனைத்து பகுதிகளிலும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளதால் 8 மணி நேரத்திற்கு மேல் கூடுதலாக இயக்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி ஜே.சி.பி ஓட்டுநர் எட்டு மணி நேரத்திற்கு மேல் அதிகமாக பணிபுரியும் ஒவ்வொரு மணி நேரத்திற்கு ரூ.69.00 வீதம் கூடுதலாக வழங்குவதற்கும் மற்றும் 26.11.2022 முதல் 25.03.2023 வரையிலான காலத்திற்கு பணியமர்த்திகொள்ள அனுமதிக்கவும், அதற்குரிய உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1. 26.11.2022 முதல் 25.03.2023 வரை நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் ஜே.சி.பி ஓட்டுநர் பணியமர்த்திக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்<br>எச்1 / 296 / 2018 | 263)அலுவலகக் குறிப்பு<br>1.அனுமதிக்கப் பட்டது<br>2.அங்கீகரிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | 4.தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 57, எம்.சவேரியார்புரம் பகுதியில் அமைந்துள்ள ஆர்.சி.துவக்கப்பள்ளி மற்றும் புனித அந்தோணியார் உயர்நிலைப்பள்ளி ஆகியவை அரசு உதவி பெறும் கல்வி நிறுவனம் எனவும் குடிநீர் இணைப்பு பெறும் நோக்கில், சொத்து வரிவிதிப்பில் விலக்களித்து வரிவிதிப்பு எண் வழங்கும்படியும், மேற்படி கல்வி நிறுவனத்திடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது.<br>இந்த கல்வி நிறுவனங்கள் 1940 ஆண்டு முதல் அரசு உதவி பெறும் பள்ளியாக செயல்பட்டு வருகிறது. மேற்படி பள்ளிகளில் சிறுபான்மை மற்றும் ஏழை எளிய கூலி தொழிலாளர்களின் குடும்பங்களை சார்ந்த மாணவர், மாணவியர்கள் 501 பேர்கள் கல்வி பயின்று வருவதுடன் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் மொத்தம் 53 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.<br>குடிநீர் இணைப்பிற்காகவும் குடிநீர் இணைப்பு வழங்கிய பின்பு புதிய குடிநீர் கட்டண வரிவிதிப்பு எண் நிர்ணயம் செய்வதற்கு சொத்துவரிவிதிப்பு எண் கட்டாயமாவதால், மேற்படி பள்ளி கட்டிடங்களுக்கு, தமிழ்நாடு அரசிதழ் எண் 33, நாள் 25.01.2018 பகுதி –4 கோவை மாநகராட்சி திருத்தச் சட்டம் 1981 பிரிவு 126(c) ன்படி அரசு உதவி பெறுவதால் மாநகராட்சி கணிணியில் Exempted Property - முறையில் வரி நிர்ணயம் செய்து கதவு எண் வழங்கி சொத்துவரி வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ2/1356/2022 (தெ.ம) | 264) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |
| | 5. தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளில் எல்இடி தெருவிளக்குகள் இல்லாத பகுதிகளில் மொத்தம் 2887 எண்ணம் புதிய எல்இடி தெருவிளக்குகள் அமைக்கும் பணியினை ரூ. 553.85 இலட்சம் மதிப்பீட்டில் 15வது நிதிக்குழு மான்யம் Un TiedGrant 2022 – 2023 ம் ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 18692/2022/CFC–1, நாள் 14.10.2022ன் படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.<br>மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது. | 265)அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்<br>இ1/4984/2022 | |
| | **6.** தூய்மை இந்தியா திட்டம் **2.0** கீழ் **4** வது மாநில உயர்மட்டக்குழு கூட்டத்தின் **09.11.2022** நாளிட்ட நடவடிக்கைகளின் படி **2022–2023**ம் ஆண்டில் மாநகராட்சிகள்/ நகராட்சிகளில் நுண் உரம் மையம் கட்டும் பணிகளுக்கு ஒப்புதல் அளித்து பணிகள் மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் **20860/2022**/SBM, நாள் **05.12.2022** படி இம்மாநகராட்சிக்கு **2** நுண் உரம் அமைக்கும் பணியினை ரூ.**115.00** இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அரசு மான்யமாக ரூ.**63.30** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக வரும் தொகை ரூ.**51.80** இலட்சத்தினை மாநகராட்சி பங்களிப்பு தொகையிலிருந்து செலவினம் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டின் படி கீழ்க்கண்ட பகுதிகளில் பணிகளை மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br><br>**வ.எண்** — **பணியின் பெயர்** — **மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)**<br>1 — தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில் MCC இயந்திரங்களுக்கான கொட்டகை அமைத்தல் — 38.90<br>2 — தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில் MCC இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் நிறுவும் பணி — 76.10<br>**மொத்தம்** — **115.00**<br><br>இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை ந.க.எண் **இ1/0107/2023**, நாள் **03.01.2023**ன் படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.<br>மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்<br>இ1/0107/2023 | **266)**அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>7. தூய்மை இந்தியா திட்டம் 2.0 கீழ் 2 வது மாநில உயர்மட்டக்குழு கூட்டத்தின் 26.02.2022 நாளிட்ட நடவடிக்கைகளின் படி 2021–2022ம் ஆண்டில் மாநகராட்சிகள்/ நகராட்சிகளில் தனிநபர் வீட்டுக்கழிப்பிடங்கள், சிறுநீர் கழிப்பிடங்கள், சமுதாய மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் கட்டும் பணிகளுக்கு ஒப்புதல் அளித்து பணிகள் மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br><br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 5990/2022/SBM, நாள் 11.04.2022 படி சிறுநீர் கழிப்பிடங்கள், சமுதாய மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அரசு மானியமாக ரூ.53.81 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக வரும் தொகையினை மாநகராட்சி பங்களிப்பு தொகையிலிருந்து செலவினம் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன்பேரில் மேற்கண்ட தூய்மை இந்தியா திட்டம் 2.0 நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் இம்மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் சிறுநீர் கழிப்பிடங்கள், சமுதாய மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் அமைக்க தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண் இ1/5097/2022 நாள் 28– 12–2022 மற்றும் 05.01.2023 ல் படி நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th><th>அரசு மான்ய நிதி</th><th>மாநகராட்சி பங்களிப்பு</th></tr>
<tr><td>1</td><td>தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட மாதவநாயர் காலனி பகுதியில் சமுதாய கழிப்பிடம் (16 இருக்கை) மற்றும் சிறுநீர் கழிப்பிடம் (3 இருக்கை) அமைக்கும் பணி</td><td>28.20</td><td>13.20</td><td>15.00</td></tr>
</table>
</td>
<td>267)அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலைய பகுதியில் உள்ள ஆதிதிராவிடர் தங்கும் விடுதிக்கு பின்புறம் பொதுக்கழிப்பிடம் (14 இருக்கை) மற்றும் சிறுநீர் கழிப்பிடம் (4இருக்கை) அமைக்கும் பணி</td><td>36.28</td><td>19.25</td><td>17.03</td></tr>
<tr><td>3</td><td>தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பாளை ரோடு பகுதியில் பொதுக்கழிப்பிடம் (14இருக்கை) மற்றும் சிறுநீர் கழிப்பிடம் (4 இருக்கை) அமைக்கும் பணி</td><td>36.28</td><td>19.25</td><td>17.03</td></tr>
<tr><td>4</td><td>தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட சிவன் கோவில் தெரு பகுதியில் (Near Auto Stand) சிறுநீர் கழிப்பிடம் அமைக்கும் பணி (6 இருக்கை)</td><td>3.00</td><td>1.055</td><td>1.945</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>103.76</td><td>52.755</td><td>51.005</td></tr>
</table>
<br>
மேற்படி பணிகளுக்கு வழங்கப்பட்ட நிர்வாக அனுமதி மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவல குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்<br>
இ1/5097/2022
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>8. தூய்மை இந்தியா திட்டம் 2.0 கீழ் 3 வது மாநில உயர்மட்டக்குழு கூட்டத்தின் 27.06.2022 நாளிட்ட நடவடிக்கைகளின் படி 2022–2023ம் ஆண்டில் மாநகராட்சிகள்/ நகராட்சிகளில் தனிநபர் வீட்டுக்கழிப்பிடங்கள், சிறுநீர் கழிப்பிடங்கள், சமுதாய மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் கட்டும் பணிகளுக்கு ஒப்புதல் அளித்து பணிகள் மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ளது.<br>
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 18856/2022/தூஇதி 2, நாள்</td>
<td>268) அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது</td>
</tr>
</table>

13.07.2022ன் படி இம்மாநகராட்சிக்கு சிறுநீர் கழிப்பிடங்கள், சமுதாய மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அரசு மான்யமாக ரூ.27.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக வரும் தொகையினை மாநகராட்சி பங்களிப்பு தொகையிலிருந்து செலவினம் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தூய்மை இந்தியா திட்டம் 2.0 நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் இம்மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் சிறுநீர் கழிப்பிடங்கள், சமுதாய மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் அமைக்க தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண் இ1/5098/2022 நாள் 07.11.2022 ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | அரசு மான்ய நிதி | மாநகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பெரியசாமி நகர் திருச்செந்தூர் மெயின் ரோடு பகுதியில் சமுதாய கழிப்பிடம் (12 இருக்கை) மற்றும் சிறுநீர் கழிப்பிடம் (4 இருக்கை) அமைக்கும் பணி | 22.50 | 10.60 | 11.90 |
| 2 | பாலவிநாயகர் கோவில் தெரு வசந்த் அன் கோ அருகில் மற்றும் ஜீன் பாக்டரி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் பொதுக்கழிப்பிடம் (12 இருக்கை) மற்றும் சிறுநீர் கழிப்பிடம் (4இருக்கை) அமைக்கும் பணி | 36.00 | 17.20 | 18.80 |
| | மொத்தம் | 58.50 | 27.80 | 30.70 |

| | | |
|---|---|---|
| | மேற்படி பணிகளுக்கு வழங்கப்பட்ட நிர்வாக அனுமதி மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>அ.கு : மாமன்றம் பதிவு செய்யலாம்<br>இ1/5098/2022 | |
| | **9.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 18692/2022/CFC–1, நாள் 03.01.2023ல் 15வது நிதிக்குழு மான்யம் Tied மற்றும் Un TiedGrant 2022 – 2023ம் ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் தார் சாலைகள், பேவர் பிளாக் சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>அதன்பேரில், தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தார் சாலைகள், பேவர் பிளாக் சாலைகள், மழைநீர் வடிகால் பணிகள், சிறுபாலம் அமைக்கும் பணி மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகளை ரூ.1433.96 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை ந.க.எண் இ1/4984/2022, நாள் 10.01.2023ன் படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.<br>மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்<br>இ1/4984/2022 | 269) அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது |
| | **10.** கொரோனா தொற்றால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்துள்ள நிவாரனநிதி வழங்குவதற்கு ஏதுவாக வறுமை கோட்டுப்பட்டியலில் இடம் பெறாதவர்களின் விவரங்களை வறுமை கோட்டிப்பட்டியலில் இணைத்திடவும் – சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறையினரால் வெளியிடப்பட்டுள்ள அரசானை எண்: G.O.(Ms) No:24, நாள்: 11.06.2021 படி கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ரூபாய் 5 இலட்சமும், பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகளுக்கு ரூபாய் | 270)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

3 இலட்சமும், உறவினரின் பாதுகாப்பில் வளரும் குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூபாய்.3000/– என்ற வீதம் மேற்படி குழந்தைகளுக்கு 18 வயது பூர்த்தியாகும் வரையிலும் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. அதன்படி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து கீழ்க்கண்டவாறு பயனாளிகள் பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | குழந்தையின் பெயர் | வயது மற்றும் பாலினம் | முகவரி | BPL Number |
|---|---|---|---|---|
| 1 | மெரிபா | 13 பெண் | 480 வி.இ ரோடு தூத்துக்குடி 628 002 9600280405 | |
| | மேக் லொஜோண்டோ | 12 ஆண் | | |

மேற்படி வரப்பெற்ற பட்டியலில் கண்டுள்ள நபர்களை சிறப்பினராக கருதி வறுமைக்கோடு பட்டியலில் சேர்க்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்1/748/2019

11. தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றத்தின் 30.11.2022ம் தேதிய 248 ஆம் எண் தீர்மானத்தில், இம்மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் தச்சர் தெருவில் கட்டப்பட்டுள்ள வணிக வளாக 5 கடைகளுக்கு 3வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ( உரிமம்

271) அலுவலகக் குறிப்பு
1.உயர்த்தப்பட்ட ஒப்பந்தபுள்ளி தொகையானது ஏற்றுக்

ஒப்படைக்கும் நாள்முதல் மூன்றாண்டு காலத்திற்கு ) 20.01.2023அன்று நடைபெறும் என தெரிவித்து மேற்படி தச்சர் தெரு வணிக வளாகம் முன்பு பொதுமக்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் விளம்பர பலகை (Flex Board) மூலமாகவும் மற்றும் இம்மாநகராட்சி மைய அலுவலகம் மற்றும் அனைத்து மண்டல அலுவலக அறிவிப்பு பலகையில் மேற்படி 3வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 09.01.2023 அன்று வெளியிடப்பட்டது.

அதன்பேரில் 20.01.2023 (வெள்ளிக்கிழமை) அன்று மாலை 2 மணி முதல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏலம் கோர எந்த நபரும் விண்ணப்பிக்காத நிலையில் மாலை 3.30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் வரப்பெற்ற மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விண்ணப்ப உறைகள் ஆணையர் அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ளது.

தச்சர் தெருவில் தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டுள்ள வணிக வளாக **கடை எண்.C1**க்கான உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை ரூ. | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திருமதி. ஸ்னோபி நிவேதா,<br><br>4D/2A,இஞ்ஞாசியார்புரம் 2வது தெரு, | ரூ.20,000/– | ரூ.20,150/– |

கொள்ளப்பட்டு உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்டது.
2.அனுமதிக்கப் பட்டது

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>தூத்துக்குடி –2</td><td></td><td></td></tr>
<tr><td>2.</td><td>திரு. நாராயணன்,<br>3, அழகேசபுரம் மெயின்ரோடு,<br>தூத்துக்குடி.</td><td></td><td>ரூ.20,050/–</td></tr>
</table>
அ) மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. ஸ்னோபி நிவேதா என்பவரால் கோரப்பட்டுள்ள ரூ.20,150/–ம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது. எனவே மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
ஆ) மேற்படி தச்சர் தெரு வணிக வளாக கடை எண்கள்,5,6,7 மற்றும் 8 க்கான உரிமத்திற்கு 3வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எந்த நபரும் முன்வரவில்லை. எனவே மேற்படி கடைகளுக்கு 4வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:<br>
1. ''அ'' மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>
2. ''ஆ'' மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
அ16/2380/2022
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>12.தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றத்தின் 29.07.2022ம் தேதிய 172 ஆம் எண் தீர்மானத்தில், இம்மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட கிரேட் காட்டன் சாலை மற்றும் மேல பெரிய காட்டன் சாலையில் தற்சமயம் காலியாக உள்ள 9 கடைகளுக்கு 2வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ( உரிமம் ஒப்படைக்கும் நாள்முதல் மூன்றாண்டு காலத்திற்கு ) 20.01.2023 அன்று நடைபெறும் என தெரிவித்து மேற்படி கிரேட் காட்டன் சாலை வணிக வளாகம் முன்பு பொதுமக்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் விளம்பர பலகை (Flex Board) மூலமாகவும் மற்றும் இம்மாநகராட்சி மைய அலுவலகம் மற்றும் அனைத்து மண்டல அலுவலக அறிவிப்பு பலகையில் மேற்படி 2வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு</td>
<td>272) அலுவலகக் குறிப்பு<br>1.உயர்த்தப்பட்ட ஒப்பந்தபுள்ளி தொகையானது ஏற்றுக் கொள்ளப்பட்டு உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்டது.<br>2.அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

09.01.2023 அன்று வெளியிடப்பட்டது.

அதன்பேரில் 20.01.2023 (வெள்ளிக்கிழமை) அன்று மாலை 2 மணி முதல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏலம் கோர எந்த நபரும் விண்ணப்பிக்காத நிலையில் மாலை 3.30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிதாரார்கள் முன்னிலையில் வரப்பெற்ற மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விண்ணப்ப உறைகள் ஆணையர் அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ளது.

மேலபெரிய காட்டன் சாலையில் தரை தளத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாக **கடை எண்.2**க்கான உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை ரூ. | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. ராதா கிருஷ்ணன், 53/1, பாண்டுரங்கன் தெரு, தூத்துக்குடி – 628002 | ரூ.10,513/– | ரூ.10,650/– |
| 2. | திரு. ரமேஷ், 10B, மாசிலாமணிபுரம் முதல் தெரு, தூத்துக்குடி– 628008 | | ரூ.10,600/– |

அ) மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ராதா கிருஷ்ணன் என்பவரால் கோரப்பட்டுள்ள ரூ.10,650/–ம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி

| | | |
|---|---|---|
| | தொகையானது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது. எனவே மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>ஆ) மேற்படி கிரேட் காட்டன் சாலை வணிக வளாக கடை எண்கள்.6A,7,8,9,10,12,13,மற்றும் 14 க்கான உரிமத்திற்கு 2வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எந்த நபரும் முன்வரவில்லை. எனவே மேற்படி கடைகளுக்கு 3வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1. "அ" மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>2. "ஆ" மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ16/1180/2022 | |
| | 13. தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றத்தின் 29.07.222 ம் தேதி 175ஆம் எண் தீர்மானத்தில், இம்மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் தெற்கு காட்டன் சாலையில் கட்டப்பட்டுள்ள வணிக வளாக 8 கடைகள் மற்றும் வணிகம் மற்றும் அலுவலக பயன்பாட்டிற்குப் பயன்படுத்தக்கூடிய 4 அறைகளுக்கு 3வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ( உரிமம் ஒப்படைக்கும் நாள்முதல் மூன்றாண்டு காலத்திற்கு ) 20.01.2023 அன்று நடைபெறும் என தெரிவித்து மேற்படி தெற்கு காட்டன் சாலை வணிக வளாகம் முன்பு பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் கவனத்தை ஈர்க்கும் வகையில் விளம்பர பலகை (Flex Board) மூலமாகவும் மற்றும் இம்மாநகராட்சி மைய அலுவலகம் மற்றும் அனைத்து மண்டல அலுவலக அறிவிப்பு பலகையில் மேற்படி 3வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 09.01.2023 அன்று வெளியிடப்பட்டது.<br><br>அதன்பேரில் 20.01.2023 (வெள்ளிக்கிழமை) அன்று மாலை 2 மணி முதல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இதனைத் தொ<br>டர்ந்து ஏலம் கோர எந்த நபரும் விண்ணப்பிக்காத நிலையில் மாலை 3.30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் | 273) அலுவலகக் குறிப்பு<br>1.உயர்த்தப்பட்ட ஒப்பந்தபுள்ளி தொகையானது ஏற்றுக் கொள்ளப்பட்டு உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்டது.<br>2.அனுமதிக்கப் பட்டது |

முன்னிலையில் வரப்பெற்ற மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விண்ணப்ப உறைகள் ஆணையர் அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ளது.

தெற்கு காட்டன் சாலையில் தரை தளத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாக **கடை எண்.13**க்கான உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எ ண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | மாநகராட்சி யால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள் ளி ஆரம்ப மாத வாடகை தொகை ரூ. | வரப்பெற்ற ஒப்பந்தப்பு ள்ளியில் குறிப்பிடப் பட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.பார்த்திபன், 105 MK தெரு, தூத்துக்குடி–2 | ரூ.8,500/– | ரூ.8,800/– |

அ) மேற்படி வணிக வளாக தரை தளம் கடை எண்.13க்கு திரு. பார்த்திபன் என்பவர் அளித்த ஒரேயொரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட மாத வாடகை ரூ.8,800/– மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளி குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்,

ஆ) மேற்படி தெற்கு காட்டன் ரோடு வணிக வளாகம் தரைதளத்தில் உள்ள கடை எண். 2,3,4,5,8,9,11மற்றும் முதல் தளத்தில் கடை எண்.F1, F2 இரண்டாம் தளத்தில் கடை எண். S1,S2க்கான உரிமத்திற்கு 3வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எந்த நபரும் முன்வரவில்லை. எனவே மேற்படி கடைகளுக்கு 4வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு:<br>1. ‘‘அ’’ மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>2. ‘‘ஆ’’ மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ16/2380/2022 | |
| | 14. தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றத்தின் 08.04.2022ம் தேதி 86ஆம் எண் தீர்மானத்தில்,தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட பாளை ரோடு TMB காலனி அருகில் உள்ள டோபிகானா வளாகத்தில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வணிக வளாக கட்டிடத்தில் தரை தளத்தில் உள்ள 10 கடைகளுக்கும், முதல் தளத்தில் உள்ள 10 கடைகளுக்கும் 3வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி (உரிமம் ஒப்படைக்கும் நாள்முதல் மூன்றாண்டு காலத்திற்கு) 20.01.2023அன்று நடைபெறும் என தெரிவித்து மேற்படி டோபிகானா வணிக வளாகம் முன்பு பொதுமக்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் விளம்பர பலகை (Flex Board) மூலமாகவும் மற்றும் இம்மாநகராட்சி மைய அலுவலகம் மற்றும் அனைத்து மண்டல அலுவலக அறிவிப்பு பலகையில் மேற்படி 3வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 09.01.2023 அன்று வெளியிடப்பட்டது.<br><br>அதன்பேரில் 20.01.2023 (வெள்ளிக்கிழமை) அன்று மாலை 2 மணி முதல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏலம் கோர எந்த நபரும் விண்ணப்பிக்காத நிலையில் மாலை 3.30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் வரப்பெற்ற மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விண்ணப்ப உறைகள் ஆணையர் அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ளது.<br><br>டோபிகானா வளாகத்தில் தரை தளத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாக **கடை எண்.G10**க்கான உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. | 274) அலுவலகக் குறிப்பு<br>1.உயர்த்தப்பட்ட ஒப்பந்தபுள்ளி தொகையானது ஏற்றுக் கொள்ளப்பட்டு உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்டது.<br>2.அனுமதிக்கப் பட்டது |

| வ. எண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை ரூ. | வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.காட்சன் ஓய்ஸ்லி தாஸ், 4/36, KTC நகர் 2வது தெரு, சங்கரபேரி, மேலூர் தூத்துக்குடி | ரூ.8,000/– | ரூ.8,100/– |

அ) மேற்படி வணிக வளாக தரை தளம் கடை எண்.G10க்கு திரு.காட்சன் ஓய்ஸ்லி தாஸ் என்பவர் அளித்த ஒரேயொரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட மாத வாடகை ரூ.8,100/– மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளி குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்,

ஆ) மேற்படிடோபிகானா வணிக வளாகத்தில் காலியாக இருக்கும் மீதம் உள்ள கடைகளுக்கான உரிமத்திற்கு 3வது குறுகிய கால ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எந்த நபரும் முன்வராத நிலையில் மேற்படி கடைகளுக்கு 4வது குறுகிய கால ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

| | | |
|---|---|---|
| | 1. ‘‘அ’’ மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>2. ‘‘ஆ’’ மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ16/4033/2022 | |
| | 15. தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட பாளை ரோடு வணிக வளாக கடை எண்.4ஐ திருமதி. பேச்சியம்மாள் என்ற பெயரில் உரிமம் பெற்று நடத்தி வந்த நிலையில் அன்னார் காலஞ் சென்றபடியால் அவரது மகன் திரு. சௌந்திரபாண்டியன் என்பவர் தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தரக்கோரி விண்ணப்பித்துள்ளார்.<br>நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (நாள்:03.07.2007) அரசாணை எண்.92ன்படி, அனுமதியற்ற அனுபோகதாரர்கள் நேர்வில் ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை அவர்களுடைய பெயரில் மாற்றித்தரலாம். இதற்காக விண்ணப்பதாரர் 12 மாதங்களுக்குரிய மாதாந்திர குத்தகை தொகைக்கு சமமான தொகையை முன்பணமாக செலுத்திடவும், பெயர் மாற்றக் கட்டணமாக ரூ.500/– நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் முதல் குத்தகைதாரரின் வாரிசுதாரர்கள் அனைத்து பாக்கித் தொகைகளையும் செலுத்துவதன் பேரிலும், நகர்புற உள்ளாட்சி மன்றம் அவ்வப்போது நிர்ணயிக்கும் குத்தகைத் தொகையை செலுத்த ஒப்புக் கொள்ளும் நிபந்தனைக்குட்பட்டும் அவர்களுடைய பெயரில் குத்தகை உரிமை மாற்றம் பெற உரிமையுடையவராவர். சட்டப்படியான வாரிசுதாரர்கள் பொதுவான குத்தகை நிபந்தனைகள் மற்றும் குத்தகை நிர்ணயத்திற்கு உட்பட்டவர்களாவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன் அடிப்படையில் மேற்படியார் மேற்படி அரசாணையின்படி, 12 மாத வாடகை தொகையை முன்பணமாக திரு. சௌந்திரபாண்டியன் என்பவர் பெயரில் (இரசீது எண்.138/01/35/22–23/0013356 நாள்.13.12.2022) செலுத்தியுள்ளார். மேலும் காலஞ்சென்ற திருமதி. பேச்சியம்மாள் என்பவரின் இறப்புச் சான்றிதழ், வாரிசு சான்றிதழ் ஆகிய ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார். எனவே மேற்படி கடை எண்.4ன் உரிமையை திருமதி. பேச்சியம்மாள் பெயரிலிருந்து அவரது மகன் திரு.சௌந்திரபாண்டியன் என்பவருக்கு பெயர் மாற்றம் குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>அ16/3342/2021 | 275)அலுவலகக் குறிப்பு பொருளில் தெரிவித்துள்ள வாறு நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | **16.** தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்– 16 P&Tகாலனி பகுதியில் அமைந்துள்ள ஓம்சாந்தி தியான மண்டபத்திற்குகுடிநீர் இணைப்பு வழங்குமாறு ஓம்சாந்தி தியான மண்டபத்தின் விண்ணப்பம் நாள். 20.01.2023 அன்று கோரிக்கை வரப்பெற்றுள்ளது.<br>மேற்படி கட்டிடத்திற்கு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு சொத்துவரி வரிவிதிப்பு எண் அவசியமானதாகும். மேற்படிஓம்சாந்தி தியான மண்டபத்திற்கு சொத்துவரி நிர்ணயம் செய்யப்படவில்லை. மேலும் தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் பிரிவு 126 (a)–ன்படி பொதுமக்கள் பிராத்தனை இடங்களுக்கு சொத்துவரியிலிருந்து நிர்ணயம் செய்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.<br>எனவே தற்போது வரப்பெற்ற கோரிக்கையினைத் தொடர்ந்து மேற்படி வழபாட்டு தலத்தின் முக்கியத்துவம் கருதி குடிநீர் இணைப்பு வழங்க ஏதுவாக சொத்துவரி மற்றும் கதவிலக்கம் நிர்ணயம் செய்து அதன் தொடர்ச்சியாக குடிநீர் உபயோக விதிகளின்படி குடிநீர் இணைப்பு வழங்கவும், குடிநீர் இணைப்பு வழங்கிய பின்னர் வழிபாட்டு தலங்களின் அடிப்படையில் சொத்துவரி விலக்களிக்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் பிரிவு 126 (a) மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி குடிநீர் விநியோக உபவிதிகளின்படி உரிய வழிமுறையாக நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ1/2250/2017/மே.ம | 276)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |
| | **17.** தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்படும் பல்வேறு மகளிர் சுய உதவி குழுக்களின் மூலம் தொடர்ந்து வரும் விண்ணப்பங்களில், மகளிர் சுய உதவி குழுக்களைச் சார்ந்த குடும்பங்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார தரத்தை உயர்த்தும் வகையில் வியாபாரம் செய்திட ஏதுவாக மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட ரோச் பூங்காவில் அமைந்துள்ள கடைகளை (Kiosk) மகளிர் சுய உதவி குழுக்களுக்கு மாநகராட்சிக்கு சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டு ஒதுக்கீடு செய்து உதவி புரிந்திட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.<br>ரோச் பூங்காவில் பல்வேறு வகையான மறு சீரமைக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதால் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளை ஈர்க்கும் விதமாகவும், வருகைதரும் பொதுமக்களின் மனதிற்கு இதமாகவும் இனிதாகவும் பொழுதினை இயற்கை எழிலும் ரசிக்கும் வகையிலும் தரமான இயற்கை தின்பண்டங்கள் மலிவு | 277)மகளிர் சுய உதவி குழுவின் பொருளாதார மேம்பாடு கருதி மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு வைப்பு தொகை செலுத்தியோ அல்லது தினசரி வாடகை அடிப்படையிலோ கடைகள் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தில் அனுமதிப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | விலையில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சுயஉதவிக்குழுக்கள் மூலம் கிடைக்கும் வகையிலும் மகளிர் குழுக்களின் வாழ்வாதாரம் பொருளாதாரம் மேம்படும் வகையில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடைகள் தற்காலிகமாக ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன் அடிப்படையில் இம்மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட தெற்கு கடற்கரை சாலை ரோச் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள 5 தற்காலிக கடைகளை (Kiosk)உள்ளூர் சந்தை அங்காடி மதிப்பின் அடிப்படையில் மாத தரை வாடகை நிர்ணயம் செய்து 12 மாத வாடகை முன்பணம் செலுத்துவதோடு நடைமுறையில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்படுத்தி தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதி மற்றும் மாநகராட்சியின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்களின் விண்ணப்பங்கள் மீது தொடர் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br><br>அ16/349 /2023 | |
| | 18. தூத்துக்குடி மாநகராட்சி – தெற்கு மண்டலம் வார்டு 49, 51 ஆகிய வார்டுகளில் ராஜபாண்டி நகர், பெரியசாமி நகர், எம்.ஜி.ஆர் நகர், அமைந்துள்ள குடிசை பகுதிகள் உப்பு இலாகாவிற்கு சொந்தமானதாகும். இப்பகுதிகளில் பஞ்சாயத்து பகுதியாக இருக்கும் போது பொது குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. இப்பகுதி வாழ்மக்களில் பெரும்பாலானோர் உப்பளத்தில் பணிபுரியும் கூலி தொழிலாளர்களாக காணப்படுகின்றனர்.<br>இப்பகுதி மக்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளிடமிருந்து மேற்படி பகுதிக்கு குடிநீர் இணைப்பு வழங்குமாறு கோரிக்கை வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி பகுதியில் உள்ள சுய உதவி குழுக்கள் மூலம் குடிநீர் இணைப்பு ஒருஇணைப்பிற்கு 5 முதல் 7 வீடுகள் விதம் ராஜபாண்டி நகர், பெரியசாமி நகர், எம்.ஜி.ஆர் நகர்ஆகிய பகுதிகளில் மொத்தம் 571 குடியிருப்புகள் உள்ளது இதற்கு 97–பொது குடிநீர் குழாய்கள் தேவைப்படுகிறது, இதன்படி ராஜபாண்டிநகரில் 36பொது குழாய்களும், எம்.ஜி.ஆர் நகரில் 32–பொது குழாய்களும், பெரியசாமி நகரில் 29–பொது குடிநீர் குழாய்களும் விதம் 97–பொது குடிநீர் குழாய்கள் தேவைப்படுகிறது. இப்பணியை இப்பகுதி பொது மக்களின் நலன் கருதியும் பொது மக்களுக்கு அத்தியாவசியமாக வழங்க வேண்டிய குடிநீரின் அவசர அவசியத்தை கருத்தில் | 278)கூலி தொழிலாளர்களின் நலன் கருதி குடிநீர் முன்வைப்பு தொகையினை பெற்று குடிநீர் இணைப்பு வழங்கிட முடிவு செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | கொண்டும் இப்பகுதி மக்களுக்கு சுய உதவி குழுக்கள் மூலம் இப்பணியை மாமன்ற அனுமதியோடு செய்ய அனுமதிக்கும் வகையில் முற்றிலும் தற்காலிகமாக குடிநீர் இணைப்பு வழங்கி கேட்புகள் எழுப்பி வசூல் செய்திட சுய உதவி குழுக்களின் பிரதிநிகளிடம் ஒப்பந்தப்பத்திரம் பெற்று வழங்குமாறு ஏற்கனவே இதுபோன்ற சுய உதவி குழுக்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது போன்று Water Stand post scheme திட்டத்தின் கீழ் மாமன்ற தீர்மானம் 215, நாள் 04.12.2018ல் அனுமதி வழங்கப்பட்டுள்ள அடிப்படையில் (இ3/02373–1/2018 – நாள் 04.12.2018–ல் வழங்கப்பட்டுள்ளது). மேற்படி, பகுதிக்கு அத்தியாவசிய தேவைக்காக குடிநீர் Stand post வழங்குவதற்கு குடிநீர் முன்வைப்புத் தொகை செலுத்துவதில் இருந்து விலக்களித்து குடிநீர் இணைப்புகள் வழங்கிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மேற்படி பகுதி கூலி தொழிலாளர்கள் வசிக்கும் பகுதியாக இருப்பதால், மாமன்றத்தின் கருத்தில் கொண்டும் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>ந.க.எண் இ2/00144/2023(தெ.ம) | |
| | 19. தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பாண்டுரங்கன் தெருவில், உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு போதைய இடமில்லாததால் சத்திரம் தெரு, அம்மா உணவகம் பின்புறம் உள்ள மாநகராட்சி இடத்தில் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. சத்திரம் தெரு, அம்மா உணவகம் கட்டிடத்தின் பின்புறம் உள்ள வளாகத்தில் பழைய பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள கட்டிடங்களை இடித்து, அப்புறப்படுத்தும் பணிக்கு 06.01.2023 அன்று ஏலம் நடைபெற்றதில் 10 நபர்கள் கலந்து கொண்டனர்.<br><br>மேற்கண்ட ஏலத்தில் கலந்து கொண்ட நபர்களில் M/s.Golden Spares, நிறுவனம் ஏலக் கேள்வி தொகை ரூ.1,12,000/–க்கு (GST நீங்கலாக) கோரப்பட்டது. மேற்படி உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை மற்றும் ஜிஎஸ்டி வரி ஆகியவை சேர்த்து (முன் வைப்பு தொகை நீங்கலாக) ரூ. 1,29,160/– செலுத்தியுள்ளார். மேற்படி ஏலத்தினை முடிவு செய்திடவும், மேற்கண்ட நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ஏல கேள்வி தொகை ரூ.1,12,000/– ஐ மாமன்றம் | 279)அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கலாம்.<br>இ5 /6092 /2022 | | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்:30.01.2023

மேயர்
தூத்துக்குடி மாநகராட்சி